**THE LABOUR COURT, SALEM**
**CAMP COURT AT DHARMAPURI**
**I.D.No. 5 of 2020**
**Deposition of MW2**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. கிருஷ்ணமூர்த்தி | Father's Name | : தோர்லி |
| Village | : குட்டூர் | Taluk | : கிருஷ்ணகிரி |
| Age | : 46 | Calling | : |

Deposition of witness for the Petitioner / Respondent solemnly affirmed by Tr. A. Athiyaman, Grade-I, Bench Clerk of this court on 01.08.2025 in accordance with Provisions X of Evidence Act 1872.

முதல் விசாரணை

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 27.10.2009 ல் TN 29 L 1845 எண்னுள்ள பேருந்தில் நான் ஓட்டுநராக பேருந்தை ஓட்டிக்கொண்டு கிருஷ்ணகிரியில் இருந்து பெங்களூர் சென்றுகொண்டிருந்தேன். மாலை 4.30 மணிக்கு கிருஷ்ணகிரியில் இருந்து பேருந்தை எடுத்து பெங்களூர் செல்லும்போது கூடல் கேட் என்ற இடத்தில் வரும்போது பயணச்சீட்டு பரிசோதகர் கந்தசாமி என்பவர் பரிசோதனைக்காக எங்கள் பேருந்துக்கு வந்தார்.

அங்கு பேருந்து நிறுத்தத்தில் இறங்கிய 4 பயணிகளிடம் பயணச்சீட்டு கேட்டார். அந்த 4 பேரும் ஒசூரில் ஏறி கூடல் கேட்டில் இறங்கவேண்டியவர்கள் பயணச்சீட்டுக்கான பணத்தை நடத்துநர் பெற்றுக்கொண்டு பயணச்சீட்டு தரவில்லை என்று சொன்னார்கள். பரிசோதகரும், நடத்துநரும், பயணிகளும் பேசிக்கொண்டார்கள். வண்டியை ஓரம் கட்டி நிறுத்திவிட்டு டிக்கட் தராமல் பணம் மட்டும் நடத்துநர் வாங்கிக்கொண்டார் என அங்கு பேசிக்கொண்டார்கள். வண்டியை ஓரம்கட்டி நிறுத்திவிட்டு பயணிகள் முன்பு புகார் எழுதிக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் Ex.M1 புகாரில் உள்ள கையெழுத்து

என்னுடையதுதான். அந்த புகாரில் பரிசோதகர் கந்தசாமியும் கையெழுத்து போட்டுள்ளார். பயணி ஒருவர் புகார் எழுதிக்கொடுத்துள்ளார். நடத்துநரும் புகார் எழுதிக்கொ்டுத்துள்ளார்.

**குறுக்குவிசாணை (மனுதாரர் தரப்பில்)**

நான் எழுதிக்கொடுத்ததாக சொல்லும் கடிதத்தில் எந்த தேதியில் நான் பணியில் இருந்தேன் என சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு கைக்கடிகாரம் கட்டும் பழக்கம் உள்ளதா என்றால் உள்ளது. சம்பவ தினத்தன்று கைக்கடிகாரம் கட்டியிருந்தேன் என்றால் சரிதான். கடிகாரத்தில் 12 மணி நேரப்படி நேரம் காட்டுகிறது என்றால் சரிதான். என்னுடைய கடிதத்தில் எத்தனை மணிக்கு கூடல் கேட் பேருந்து நிறுத்தத்தில் பரிசோதனைக்காக டிக்கம் பரிசோதகரால் பேருந்து நிறுத்தப்பட்டது என சொல்லவில்லை என்றால் சரிதான்.

பரிசோதகர் கந்தசாமி என்பவரது பணி எண். என்ன என்று தெரியாது. கூடல் கேட்டில் பரிசோதகர் விசாரித்ததாக சொல்லப்படும் பயணிகள் 4 பேரும் எங்கு ஏறினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பயணிகள் ரூ.100/– கொடுத்து நடத்துநரிடம் பயணச்சீட்டு கேட்டதாக சொல்வது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த 4 பயணிகளின் பெயர் , தந்தை பெயர், முகவரி எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

பரிசோதகர் பேருந்தை நிறுத்தி பேருந்துக்குள் வந்து ஒவ்வொரு பயணியையும் பரிசோதித்தாரா என்றால பரிசோதித்தார். அப்போது எந்த பயணியும் பயணிசசீட்டு இல்லாமல் இருக்கவில்லை என்றால் சரிதான். கூடல்கேட் பஸ் நிறுத்தத்தில் பஸ் எவ்வளவு நேரம் நிறுத்தப்பட்டிருந்தது என்றால் 1 நிமிடம் தான் நிறுத்தியிருந்தோம். அதன்பிறகு பரிசோதகர் பேருந்திலேயே பெங்களூர் வந்தாரா என்றால் 1 கி.மீ தூரம் வந்து ஆவணங்களை எழுதிக்கொண்டு இறங்கிவிட்டார். பெங்களூர் வரை வந்தாரா என எனக்கு ஞாபகம் இல்லை. நான் அன்றைய பணி முடிந்து பொது மேலாளரிடமோ, கிளை மேலாளரிடமோ நடந்த சம்பவம் குறித்து புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த பயணிகள் நடத்துநரிடம் பணம்

கொடுத்தார்களா இல்லையா என எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

நான் கொடுத்த வாக்குமூலத்தை எழுத எனக்கு பேப்பர் எப்படி கிடைத்தது என்றால் கடையில் வாங்கி எழுதினோம். பேருந்தில் பயணம் செய்தவரை மேற்சொன்ன பயணிகள் பயணச்சீட்டு கொடுக்கவில்லை என என்னிடம் எந்த புகாரும் சொல்லவில்லை என்றால் சரிதான். நடத்துநரிடம் பயணச்சீட்டு கேட்டு பயணிகள் தகராறு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான் சக பயணிகளிடமும் எந்த புகாரும் சொல்லவில்லை என்றால் சரிதான். கூடல்கேட்டில் எத்தனை பயணிகள் இறங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. தணிக்கையாளர் தலைமை அலுவலகத்திற்கு என்ன புகார் எழுதிக்கொடுத்தார் என எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் பேருந்து இயக்கும் பணியில்தான் கவனமாக இருந்ததேன் என்றும் அதனால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றும் சொனனால் சரியல்ல. தற்போது அலுவலகத்தில் என்னை அழைத்து என்ன சொல்லவேண்டும என்று சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem